1969 மார்ச் 22]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) சென்னை, தூர் எடுத்தல்-பண்படுத்தல் பிரிவைச் சேர்ந்த நிர்வாகப் பெறியாளர், இந்த ஏரியில் தூர் எடுப்பதற்கான நேரடி ஆய்வை முடித்துள்ளார் ; இதற்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்திலிருந்து (பாசன) தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டு அன்னாரின் தொழில் நுணுக்கக் குறிப்புரைகளுடன் மேற்பார்வைப் பொறியாளருக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

வைகை அணையிலிருந்து மின்சாரம்.

*430 வினா : **திரு. எஸ். அக்கினிராஜு :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) மதுரை மாவட்டம் வைகை அணையிலிருந்து மின்சாரம் எடுக்கும் செயற்குறிப்பு ஏதாவது அரசினிடமிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எந்த அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன் : (அ) and (இ) வைகை அணைக்குப் பின்புறத்தில் 10 மெகாவாட் உற்பத்தி திறனளவு கொண்ட மின் நிலையம் ஏற்படுத்த முடியும். எற்கெனவே அவசியமான பெருங் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், இதில் கிடைக்கக்கூடிய மின்சக்தி வளம் மிகவும் குறைவானதும், குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே கிடைப்பதும். ஆகையால் மிகுந்த ஆதாயமுள்ள பெரிய வேலைத் திட்டங்கள் முடிந்த பின்பே இவ்வேலைத் திட்டம் ஆலோசிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) நவசக்தி நாள் இதழ்மீது அவை உரிமைக் கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் நவ சக்தி என்ற ஒரு நாளிதழின் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

நாகூரில் இரு முஸ்லீம் பெண்களை வீட்டிலிருந்து போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் வெளியே அழைத்துச் சென்றதாகக் கூறப்படும் செய்தியும், அதனால் ஏற்பட்டுள்ள பரபரப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு ஞானசம்பந்தன் அவர்கள் ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதில் "தஞ்சை மாவட்டம், நாகூரில் 20–3–1969 இரவு நாகூர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் ஒரு முஸ்லீம் வீட்டிலிருந்து எவ்விதக் காரணமுமின்றி இரு பெண்களைக் கட்டாயப்படுத்தி வெளியே அழைத்துக்கொண்டு போனதால், நாகூர் முஸ்லீம் பெரு மக்களிடம் பெரும் பரபரப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் ஏற்படும் விளைவுகளைத் தடுக்க இம்மன்றத்தின் இதர நடவடிக்கைகளை ஒற்றிவைத்து இதை விவாதிக்க வேண்டும்" எனக் கோரியிருக்கிறார்கள்.

அது எப்படி அவையினுடைய நிகழ்ச்சிகளை ஒற்றிவைப்பதற்கு வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்குமாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.